தினமணி

# கருவில் லேசர் சிகிச்சை: காப்பாற்றப்பட்ட இரட்டை பெண் குழந்தைகள்

## மெடிஸ்கேன் மையத்தில் நவீன வசதி

கருவில் 'லேசர் அப்லேஷன்' சிகிச்சை அளித்து இரட்டை பெண் குழந்தைகளை சென்னை மெடிஸ்கேன் மைய மருத்துவர்கள் காப்பாற்றி சாதனை புரிந்துள்ளனர்.

சென்னையைச் சேர்ந்த விண்ணரசி என்ற பெண்ணுக்கு மருத்துவ ரீதியாக நஞ்சு ('பிளசண்டா') பிரச்னையுடன் உருவான இரட்டை பெண் குழந்தைகளுக்கு கரு நிலையில் லேசர் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு அண்மையில் பிரசவமாகி, இரண்டு குழந்தைகளும் நலமாக உள்ளன.

கருவில் இரட்டைக் குழந்தைகள் உருவாகி பிரச்னை உள்ளதாக அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலம் தெரிய வரும் நிலையில், கரு நிலையிலேயே சிகிச்சை அளிப்பதற்கான நவீன லேசர் சிகிச்சை மையத்தை நாட்டிலேயே முதன்முறையாக சென்னை மெடிஸ்கேன் மையம் புதன்கிழமை (அக்.12) தொடங்கியுள்ளது.

இந்த நவீன சிகிச்சை மைய தொடக்க விழாவில் நஞ்சு பிரச்னை இருந்த மேலே குறிப்பிட்ட இரட்டைக் குழந்தைகளுக்கு கரு நிலையில் அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து மெடிஸ்கேன் மையத்தின் தலைவர் டாக்டர் எஸ்.சுரேஷ், இயக்குநர் டாக்டர் இந்திராணி சுரேஷ், ராயப்பேட்டை சீதாபதி மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் உமா ராம் ஆகியோர் கூறியதாவது:-

''விண்ணரசி கர்ப்பம் தரித்து 5 மாதங்கள் ஆனபோது, கருவின் நிலையை அறிய அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் செய்யப்பட்டது. கருவில் இரட்டை பெண் குழந்தைகள் உருவாகியுள்ளதும், ஒரே நஞ்சின் மூலம் இரண்டு கருக் குழந்தைகளுக்கும் ('மோனோகோரியோனிக் ட்வின்ஸ்') ரத்தம் செல்வதும் தெரியவந்தது. இவ்வாறு ஒரே நஞ்சு மூலம் ரத்தம் செல்லும் நிலையில், இரண்டு கருக் குழந்தைகளுக்கும் சீரான ரத்த ஓட்டம் இருக்காது. மேலும் தேவையற்ற ரத்தக் குழாய் தொடர்புகள் ஏற்பட்டிருப்பதும் தெரிய வந்தது.





**கருக் குழந்தைக்கு லேசர் சிகிச்சை அளிக்கும் பிரிவு திறப்பு விழாவில் (இடமிருந்து) மெடிஸ்கேன் மையத்தின் தலைவர் டாக்டர் எஸ்.சுரேஷ், பிரான்ஸ் நிபுணர் ஈஸ் வில், டாக்டர் இந்திராணி சுரேஷ், டாக்டர் சாந்தி சாய்ராம், டாக்டர் உமா ராம். (கீழே) இரட்டை பெண் குழந்தைகளுடன் விண்ணரசி-அவரது கணவர் ஹரி ராமகிருஷ்ணன்.**

இத்தகைய பிரச்னை ஏற்படும் நிலையில் உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்காவிட்டால், கர்ப்பப் பையிலேயே குழந்தை இறந்து விடும். இதைத் தவிர்க்க இதுபோன்று சிக்கலுடன் கூடிய 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரட்டை கருக் குழந்தைகளுக்கு லேசர் சிகிச்சை அளித்துள்ள பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் ஈஸ் வில்லை தொலைத் தொடர்பு முறையில் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறப்பட்டது; லேசர் சிகிச்சை மூலம் இரட்டை பெண் கருக் குழந்தைகளின் தேவையற்ற ரத்தக் குழாய் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு ரத்த ஓட்டம் சீராக்கப்பட்டது. இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்து இப்போது ஆரோக்கியமாக வளர்ந்து வருகின்றன.

இவ்வாறு பிரச்னையுடன் இரட்டைக் குழந்தைகள் உருவாகும் நிலையில் கரு நிலையிலேயே சிகிச்சை அளிக்க வசதியாக சென்னை மெடிஸ்கேன் மையத்தில் லேசர் சிகிச்சை மையம் தொடங்கப்பட்டுள்ளது' என்று அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக நடைபெற்ற லேசர் சிகிச்சை மைய தொடக்க விழாவில் பிரான்ஸ் நிபுணர் ஈஸ் வில் கலந்து கொண்டு கருக் குழந்தை சிகிச்சை முறையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள நவீன சிகிச்சை முறைகள் குறித்து விளக்கினார்.